සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ හා ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
Ministry of Finance, Economic Stabilization & National Policies
ජේ.ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, නො.191, ධර්මපාල මාවත, කොළඹ 07 | ஜே ஆர் ஜெயவர்தன மையம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 7
J.R. Jayewardene Center, No.191, Dharmapala Mawatha, Colombo 07

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | WBB/Notice/D/Div/2024 | ඔබගේ අංකය<br>உனது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2024.05.14 |

WBB/Circular/No.13/2024

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர்கள்
பிரதேச செயலாளர்கள்/ பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்களுக்கு,

**<u>அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டம் - இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் தொடர்பான எண்ணீடு மற்றும் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.</u>**

1. அறிமுகம் :-

1.1 அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டம் தொடர்பாக இரண்டாம் கட்டத்தின் கீழ் முதற்கட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாமற்போன நபர்களுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த விண்ணப்பங்களின் தகவல்கள் *IWMS* முறைமையில் உள்ளிடப்பட்டுள்ளன.

1.2 தெரிவு செயற்பாட்டின்போது அடுத்த கட்டமாக இருக்கும் எண்ணீடு செய்தல் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். நியமிக்கப்படவில்லை என்றால், உடனடியாக நியமிக்க வேண்டும். இவர்களுக்கு எண்ணீட்டுப் பணிக்கு தேவையான பயிற்சிகள் தற்போது நடைபெறுவருகின்றன.

1.3 எண்ணீட்டுப் பணிக்காக பயன்படுத்தப்படும் மொபைல் செயலியில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை சீர்படுத்தித் தேவையான மேம்பாடுகளுடன் செயற்படக்கூடிய வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது.

කාර්යාලය / அலுவலகம் / Office: Tel: 009411-2151481, 009411-2484600/4117; Fax: 009411-2151482
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / e-mail: welfarebenefitboard2016@gmail.com, info@iwms.wbb.gov.lk
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.wbb.gov.lk

Scanned with CamScanner

1.4 இரண்டாம் கட்டத்திற்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான எண்ணீடு மற்றும் தெரிவுக் குழுக்களின் மூலம் தெரிவு முறையின்படி தரவுகளின் சரிபார்ப்பு மற்றும் அனுமதித்தால் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் இந்த சுற்றறிக்கை மூலம் வெளியிடப்படுகிறது.

2. எண்ணீட்டுச் செயல்முறை :-

2.1 நியமனம் செய்யப்பட்ட எண்ணீட்டாளர்கள் 20 மே 2024 முதல் எண்ணீட்டுப் பணியை 10 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அதற்கு முன் ஒவ்வொரு எண்ணீட்டாளர்களும் IWMS கணினி முறைமையில் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதற்கு, பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

2.2 தற்போது எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சியாளர்கள் பிரதேச செயலக மட்டத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். அவர்கள் 20 மே 2024 க்குள் எண்ணீட்டாளர்களுக்கான பயிற்சியை பெற்றிருக்கவேண்டும்.

2.3 பிரதேச செயலர்கள் மூலம் நலன்புரி நன்மைகள் திட்டத்தினைச் செயற்படுத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரே எண்ணீட்டுப் பணியையும் மேற்கொள்ள வேண்டும். தற்போது இப்பணியில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த சிறப்பு உதவித்தொகையை, பிற கள உத்தியோகத்தர்களுக்கும் வழங்கும் வகையில், அனுமதி பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, எண்ணீட்டுப் பணியில் ஈடுபடுவதற்கு ஒரு குறிப்பிட்ட கொடுப்பனவை செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, தங்களிடமுள்ள சொந்த ஸ்மார்ட்ஃபோனைப் பயன்படுத்தி எண்ணீட்டுப் பணியை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். இதற்கு ஆண்ட்ராய்டு வசதியுடன் கூடிய 4ஜி ஸ்மார்ட் போன் தேவை என்பது கு றிப்பிடத்தக்கது.

2.4 எண்ணீட்டாளர்கள் எண்ணீடு தொடர்பாக பதிவுசெய்யத் தேவையான தரவுகளை பதிவிறக்கம் செய்தல், தரவு முறைமையில் தரவை பதிவேற்றம் செய்தல், தரவு எண்ணீடு செயல்முறைகள் போன்றவற்றை எண்ணீட்டுக்குப் பயன்படுத்தப்படும் மொபைல் செயலிகளைப் பயன்படுத்துவதில் பயிற்சி அளிக்கப்படும்.மேலதிகமாக எண்ணீடு செய்தலுக்கான வழிகாட்டி புத்தகமும் வழங்கப்படும்.

2.5 தவிர்க்க முடியாத சில காரணங்களால் திட்டமிட்ட திகதியில் எண்ணீட்டை மேற்கொள்ள முடியாவிட்டால், திட்டமிட்டதன்படி எண்ணீடு முடிந்ததன் பின்னர் இவ்வாறு விடுபட்ட வீடுகளைப் புதிய தினத்தில் மீண்டும் செல்வதோடு அதனை அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து எண்ணீட்டினை நடத்தவேண்டும். எவரையும் தவற விடக்கூடாது என்பது கொள்கை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2.6 எண்ணீடு நடைபெறும் அதே நேரத்தில், பணிகள் முறையாக நடைபெறுவதையும், பிழையின்றித் தரவுகள் சேகரிக்கப்படுவதையும்



Scanned with CamScanner

கண்காணிக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதற்காக பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு அரச நிறுவனங்களில் இருந்து நியமிக்கப்பட்ட கள உத்தியோகத்தர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும். . அரசாங்கத்தின் தற்போதைய முன்னுரிமைத் திட்டமான இதற்கு அனைத்து நிறுவனங்களும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ளதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

2.7 முதற்கட்டத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் முழுமை மற்றும் துல்லியம் குறித்து சில சிக்கல்கள் எழுந்துள்ளதால், இந்த கட்டத்தில் அவ்வாறான நிலைமையைக் குறைத்துக்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு அலுவலர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து, கண்காணிப்பு நடைமுறையை பிரதேச செயலகமூடாக அதிக முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தவேண்டும். இந்தப் பணிகளை சரியாக ஒருங்கிணைப்பு செய்யும் வகையில் மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

2.8 விண்ணப்பதாரர்கள் எண்ணீட்டின்போது தங்களது குடும்பத்தைப் பற்றிய தேவையான உண்மையான தகவல்களை தெரிவிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தரப்படும் தகவலின் உண்மைத்தன்மையின் அடிப்படையில் நன்மைகளுக்கான தகுதி இடம்பெறும். எண்ணீட்டின் முன்னர் ,தவறான தகவல்களை வழங்குவது மூலம் சட்டத்தின் 14 வது பிரிவின் கீழ் நன்மைகளை இழக்க நேரிடும் என்பதை விண்ணபதாரர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் மற்றும் அவர்கள் ஏதாவது நன்மைகளுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தால் பெற்றுக்கொண்ட நன்மைகள் அனைத்தும் மீளப் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். ஒருவர் தவறான தகவல்களை வழங்குவது சட்டத்தின் கீழ் (பிரிவு 20 இன் படி) தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

2.9 எண்ணீட்டின்போது, குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் உறுப்பினர்களைத் தவிர்த்தல், சொத்து வைத்திருக்கும் பிள்ளைகளைத் தவிர்த்தல் மற்றும் சொத்து இல்லாத பெற்றோரைத் தனி குடும்பமாக மாற்றுதல் போன்ற தவறுகள் கடந்த காலங்களில் நடந்துள்ளன. குடும்பம் என்பதற்கான வரைவிலக்கணம் குறிப்பாக எண்ணீட்டாளரினால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எண்ணீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டிக் கையேட்டில் இவ் அறிவுறுத்தல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

2.10 தகவல்களை உண்மைத்தன்மையானதாக வழங்குவது விண்ணப்பதாரரின் பொறுப்பாக இருந்தாலும், உண்மையான தகவல்களைத் தந்திரமாக முன்வைக்கத் தூண்டவேண்டியது எண்ணீட்டாளரின் பொறுப்பும் மற்றும் கடமையென்று கருத வேண்டும். மேலும் முன்னளிக்கப்பட்ட தகவல் அல்லது எளிதாகத் கண்டறியக்கூடிய தகவல்களை வேண்டுமென்றே மறைக்க அனுமதிப்பது எண்ணீட்டாளரின் ஒழுக்கமின்மையாகவும் மற்றும் சட்டவிரோத செயலாகவும் கருதப்படுகிறது.

2.11 எண்ணீட்டிற்கு உள்ளாகும் விண்ணப்பதாரர் சரியான தகவலை மறைத்து தவறான தகவல்களை முன்னளித்தால் , எண்ணீட்டாளருக்கு அந்த நிலைமையை சரிசெய்வது கடினமாக இருந்தால், அவர் மொபைல்

කාර්යාලය / அலுவலகம் / Office — Tel: 009411-2151481, 009411-2484600/4117; Fax: 009411-2151482
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / e-mail — welfarebenefitboard2016@gmail.com, info@iwms.wbb.gov.lk
වෙබ් අඩවිය / இணையதளம் / Website — www.wbb.gov.lk

Scanned with CamScanner

விண்ணப்பத்தின் முடிவில் தரப்பட்டிருக்கும் கருத்து பெட்டியில் அவரின் கருத்தை / தகவலை சுருக்கமாக கருத்தைப் பதிவு செய்ய வேண்டும். இதன் பின்னர் தெரிவுக்குழு கோரும் போது உரிய தகவல் மற்றும் சான்றுகளை எண்ணீட்டாளர் சமர்ப்பிக்க வேண்டும்.

2.12 தெரிவுக் குழுவுக்குத் தேவைப்படும்போது தகவல்களைத் தெளிவுபடுத்துவதற்கு எண்ணீட்டாளர்கள் பங்கேற்று உதவ வேண்டும். தேர்வுக் குழுவுக்குத் தேவைப்படும் கூடுதல் தெளிவுபடுத்தல்களுக்குத் தேவையான தகவல் உரிய களத்திலிருந்து பெற்றதாக இருக்கவேண்டும்.

3. தெரிவுக் குழுக்கள் மூலம் தரவு சரிபார்த்தல் மற்றும் அங்கீகரித்தலுக்கான நடைமுறை:-

3.1 நலன்புரி நன்மைகள் சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இன்னும் தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படவில்லையென்றால், உங்களின் பிரதேச செயலகத்திற்கு முன்னளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, விரைவில் தெரிவுக்குழு அல்லது பல தெரிவுக்கு குழுக்களை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.

3.2 29.04.2024 ஆம் திகதிய 2382/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட ஆணைகள் மூலம் தெரிவுக் குழுவின் அமைப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், அதன்படி குழுக்கள் அமைக்கப்பட்வேண்டும் , தற்போது அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் அமைப்பு அவசியமென்றால் அதன்படி திருத்தப்பட வேண்டும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். அதன்படி, அமைக்கப்படும் குழுக்களின் விவரங்களை ஏற்கனவே உங்களுக்கு அனுப்பிய கூகுள் படிவத்தின் வடிவத்தின்படி விரைவில் எனக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3.3 எண்ணீடு செய்யப்பட்டதன் பின்னர் IWMS முறைமைக்கு மாற்றப்பட்ட தரவு, மீள் எண்ணீடு அல்லது பிற ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் மூலம் தரவைச் சரிசெய்வது அவசியமாகக் கருதப்பட்டால், தெரிவுக் குழுவால் அவற்றை திருத்தம் செய்ய முடியும். எனவே, தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான உரிய தரவுகளைச் சரிபார்த்து திருத்துவது தெரிவுக் குழுவின் பொறுப்பாகும். (சட்டத்தின் பிரிவு 10 ஐப் பார்க்கவும்).

3.4 மேலே உள்ள 3.3 இல் குறிப்பிடப்பட்டிருப்பதன்படி தெரிவுக் குழுவினால் ஒரு விண்ணப்பதாரி தொடர்பாக அறிந்துகொண்ட தகவல்களின் அடிப்படையில் தகுதியான நபராக சேர்க்கப்படக் கூடாது என்று தேர்வுக் குழு வலுவான ஆதாரங்களுடன் தீர்மானித்தால், அத்தகைய விண்ணப்பத்தினை IWMS முறைமையில் மறு எண்ணீடு செய்யும் செயல்முறையைப் பின்பற்றுவதன் மூலம் நன்மைகளுக்கான மறுக்கலாம். .அவ்வாறான சந்தர்ப்பங்களில், அந்த தீர்மானங்கள் தொடர்பான ஆதாரங்களுடன் கூடிய கோப்பு பௌதீகமாக பராமரிக்கப்பட்டு, அவ் விபரங்கள் பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் விவரங்களை என்னிடம் சமர்ப்பிக்க வேண்டும்.



Scanned with CamScanner

3.5 தெரிவுக்கு குழுவின் கடமைப் பொறுப்புகள் என்பன உரிய சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதை பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் ( சட்டத்தின் பிரிவு 15 ஐப் பார்க்கவும்). தெரிவுக் குழுக்களினால் அங்கீகரிக்கும் செயல்முறை 25 மே 2024 முதல் தொடங்கி 10 ஜூன், 2024 க்குள் முடிக்கப்படவேண்டும். அதன் பின்னர் IWMS முறைமை மூலம் 2024 ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளரின் சமர்ப்பிப்பின் மூலம் எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3.6 தெரிவுக் குழுக்கள் தரவு மதிப்பாய்வு செய்து அங்கீகரிக்கும் செயற்பாட்டில் பின்வரும் உத்திகளைப் பயன்படுத்தலாம். அதற்கு மேலதிகமாக வேறு பொருத்தமான முறைகளைப் பயன்படுத்துவதற்கான விருப்புரிமையை தெரிவுக்குழு கொண்டுள்ளது.

I. தரவின் நம்பகத்தன்மை காணப்படாத சந்தர்ப்பத்தில் , மீள் எண்ணீட்டினைப் பார்த்து, தரவைச் சரிபார்த்தல் .

II. தரவினை சரிபார்த்துக்கொள்ள இலங்கை மின்சார சபை , மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களின் தரவு முறைமைகளுடன் ஒப்பிட்டு தரவுகளின் துல்லியத்தை சரிபார்த்தல். (இதற்கு வசதியாக நடவடிக்கை எடுக்கப்படும்).

III. விண்ணப்பதாரிகளை அழைத்து தகவலைப் பெறவும் மற்றும் தகவலை உறுதிபடுத்திக்கொள்ளவும் முடியும்.

IV. ஆவணங்கள் அல்லது பிற ஆதாரங்களை வரவழைத்து தகவலை உறுதிபடுத்திக்கொள்ளவும் முடியும்.

3.7 தெரிவுக் குழுவின் மூலம் தீர்மானங்கள் எடுக்காமல் விண்ணப்பங்களை ஒதுக்கி வைக்கக் கூடாது அல்லது மீள் எண்ணீட்டிற்குப் பின்னர் தீர்மானம் எதுவும் எடுக்காமல் ஒதுக்கி வைக்கக்கூடாது.

3.8 அனைத்து விண்ணப்பங்களுக்கும் பொருத்தமான தெரிவுக்குழுவின் தீர்மானங்களை குறித்த காலத்திற்குள் முடிவு செய்யப்படுவதை பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்துவது அவசியமாகும். எந்தவகையிலும் அவ்வாறான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத விண்ணப்பங்கள் தொடர்பான சகல பொறுப்புகளையும் பிரதேச செயலாளர்களே ஏற்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

4. தெரிவுக் குழு மூலம் தெரிவுப் பணிகளை முடித்த பின்னர், பிரதேச செயலாளரின் சமர்ப்பிப்பு மூலம் எனக்கு அனுப்பப்பட்ட பட்டியல்களுக்கு தற்போதுள்ள ஒழுங்குவிதிகளின்படி பரிந்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் / சுட்டிகள் மற்றும் நிறைகள் ஆகியவற்றைக் கொண்டு நலன்புரி நன்மைகள் சபையின் அனுமதியின் மூலம் தெரிவு செய்யப்படும், மேலும் பட்டியல்களை காட்சிப்படுத்தல் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

5. இச் செயல்முறைகள் குறிப்பிட்ட காலத்தினுள் சரியாக நடைபெறுவதை உறுதி செய்ய மாவட்ட அளவில் தேவையான அறிவுரைகளை வழங்கிவைக்குமாறும் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் ஒருங்கிணைந்து இச்சபைக்கு தேவையான


Website www.wbb.gov.lk
Scanned with CamScanner

அனுசரணையினை வழங்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தெரிவு குழுக்களுக்கான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், நியமிக்கப்பட்ட குழுக்களின் விவரங்கள் மற்றும் எண்ணீட்டாளர்களின் நியமனம் தொடர்பான தகவல்களை சபையிற்கு அனுப்பிவைப்பதற்கும் ,*IWMS* முறைமையினுள் தகவல்களை உள்ளிடுவதற்கும் தேவையான அனுசரணையினை ஆதரவை மாவட்டச் செயலாளர்கள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த அறிவுறுத்தல்களின்படி இரண்டாம் கட்ட நலன்புரிப் பயனாளிகளைத் தெரிந்தெடுக்கும் செயல்முறையை வெற்றிகரமாகச் செய்வதற்கு நீங்கள் வழங்கும் ஆதரவை நான் பெரிதும் மதிக்கிறேன்.

ஒப்பம் :-
ஜயந்த விஜேரத்ன
தலைவர்/ஆணையாளர்.

சீனிவாசன் கிரிதரன்
மேலதிக ஆணையாளர் - தொடர்புகள்


කාර්යාලය / அலுவலகம் / Office: Tel: 009411-2151481, 009411-2484600/4117, Fax: 009411-2151482
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / e-mail: welfarebenefitboard2016@gmail.com, info@iwms.wbb.gov.lk
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.wbb.gov.lk


Scanned with CamScanner